Embassy of the United States of America
Colombo

# PRESS RELEASE

Public Affairs Section
Tel: +94 (1) 249-8100 ● Fax: +94 (1) 244-9070
Email: VanHornNT@state.gov ● http://lk.usembassy.gov

Release No. 20171101T

## இயற்கை அனர்த்தங்களை எதிர்கொள்வதற்கு இலங்கையின் தயார்நிலையை யுஎஸ்எயிட் வலுப்படுத்துகின்றது

அமெரிக்காவின் சர்வதேச அபிவிருத்திக்கான முகவர் அமைப்பு அனர்த்தத்தினை எதிர்கொள்ள தயாராகயிருத்தல், அது நிகழ்ந்தவுடன் அதனை எதிர்கொள்ளல், அதிகளவான வெள்ளம் மற்றும் மண்சரிவுகள் காரணமாக உயிர்கள் பறிபோவதை தடுத்தல் போன்ற விடயங்களில் இலங்கை அரசாங்கத்துடன் நெருக்கமாக இணைந்து செயற்படுகின்றது. சமீபத்தில் யுஎஸ்எயிட் உலக காலநிலை அவதான நிலையத்தின் வெள்ள வழிகாட்டல் அமைப்பின் (FFGS) வடிவமைப்பாளர் கலாநிதி கொன்ஸ்டன்டைன் பி ஜோர்ஜ்ககோஸினை இலங்கைக்கு அழைத்திருந்தது. இலங்கை உட்பட பிராந்திய FFGS குறித்து இலங்கையின் அனர்த்த முகாமைத்துவ அமைச்சுடன் இணைந்து பணியாற்றுவதற்காக அவர் அழைக்கப்பட்டிருந்தார்.

FFGS தானியங்கி மழையை அளக்கும் சாதனங்களில் இருந்து தரவுகளை பெற்று செய்மதிகள் மூலம் சர்வதேச தரவுகளுடன் அதனை ஒப்பிட்டு பாதிப்பிற்கு உள்ளாக கூடிய சமூகங்களிற்கு அவர்கள் தங்கள் பகுதிகளில் இருந்து வெளியேறுவதற்கான முன்கூட்டிய எச்சரிக்கைகளை வழங்குகின்றது. அமைச்சின் ஒத்துழைப்புடன் கலாநிதி கொன்ஸ்டன்டைன் பி ஜோர்ஜ்ககோஸ் இலங்கையில் தற்போது காணப்படும் அமைப்பினை ஆராய்ந்தார். அதனை மேலும் முன்னேற்றகரமானதாக்குவதற்கான வழிமுறைகள் குறித்தும் அவர் ஆராய்ந்தார். இந்த ஒத்துழைப்பின் கீழ் நவீன அமைப்பு முறைகள், செய்மதி தகவல்கள், காலநிலை எதிர்வு கூறல்கள் குறித்து தீவிர பயிற்சி வழங்கப்படும்,. தென்னாசிய பிராந்திய அமைப்பிற்கு யுஎஸ்எயிட் உலக காலநிலை அவதான நிலையம், அமெரிக்காவின் தேசிய கடல் மற்றும் வளிமண்டல நிர்வாகம் ஆகியன ஒத்துழைப்பை வழங்குகின்றன.

யுஎஸ்எயிட் தொடர்ந்து முன்னெடுக்கும் இயற்கை அனர்த்தத்தை எதிர்கொள்ளல் அதிலிருந்து மீள்வது தொடர்பான திட்டங்கள், அனர்த்தங்களை எதிர்கொள்ள உள்ளூர் மக்களை ஊக்குவித்தல் அதாவது சமூக மற்றும் நம்பிக்கை சார்ந்த செயற்பாட்டாளர்கள் வலையமைப்புகள் மூலம் உள்ளூர் மயப்படுத்துவது இயற்கை மற்றும் மனித நடவடிக்கைகளால் பேரழிவுகளை எதிர்கொள்ளும் சமூகங்களிற்கான உதவியை சிறப்பானதாக்கும் என்ற அடிப்டையில் செயற்படுவது, ஆகியனவற்றை மேலும் வலுப்படுத்தும் விதத்திலேயே கலாநிதி கொன்ஸ்டன்டைன் பி ஜோர்ஜ்ககோஸின் இலங்கை விஜயம் அமைந்துள்ளது.